ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1806 - 2013 අප්‍රේල් මස 12 වැනි වැනි සිකුරාදා - 2013.04.12
*1806 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) – மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1016 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | 1017 | | - |


**கவனிக்க.**- (i) பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ஏர்ல் குணசேகர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2010 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (சனவரி - மாச்சு) புத்தகப்பெயர்ப்பட்டிய லொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, பெருந்தெருக்கள், வெகுசனத் தொடர்பு மற்றும் கிராமிய, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

*1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க காணி அபிவிருத்திச் சட்டத்தின் 6(1) எனும் பிரிவின்கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2(1) "அ" பிரிவில் விளக்கப்பட்டுள்ளவாறு தென் மாகாண காணி, காணி அபிவிருத்தி கௌரவ அமைச்சர் சந்திமா ராசபுத்திர அவர்களால் (1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, 1981 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, 1993 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, 1995 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க 1996 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்தம்) சட்டங்களின் திருத்தப்படி 1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க காணி அபிவிருத்திச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின்கீழான இங்கே கீழ் விபரிக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி உத்தியோகத்தர்கள் அவர்களின் கடமைகளுக்குப் புறம்பாக 2012.01.01 ஆந் திகதியிலிருந்து செயற்படுவதற்காக காணி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.*

எம். வை. எஸ். தேசப்பிரிய,
செயலாளர்,
தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி,
பெருந்தெருக்கள், வெகுஜனத் தொடர்பு மற்றும்
கிராமிய, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு.

*2013, மார்ச்சு 05.*

**அட்டவணை**

| தொடர் இல. | உத்தியோகத்தர் பெயர் | அமர்த்தப்பட்டுள்ள அலுவலகம் | நியமிக்கப்பட்டுள்ள மாகாணம் |
|---|---|---|---|
| 1 | அலுத்படபெதிகே நாலக பிரியந்த | பிரதேச செயலாளர் அலுவலகம், ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம் |
| 2 | தர்சன சாமந்த கலங்சூரிய | பிரதேச செயலாளர் அலுவலகம், வெலிவிடிய, திவிதுரை | தென் மாகாணம் |
| 3 | தித்தெனிபொத மாதரகே சந்தன உபுல் குமார | உதவி காணி ஆணையாளர் அலுவலகம், ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம் |
| 4 | ஹேவா தொண்லேகே பந்து குமார ஜயலத் | பிரதேச செயலாளர் அலுவலகம், ஹக்மன | தென் மாகாணம் |
| 5 | ஜாஸிங்கந்தகே ஜானக சிரிலால் தஹநாயக்க | பிரதேச செயலாளர் அலுவலகம், பஸ்கொடை | தென் மாகாணம் |
| 6 | கரொட்டகொட கமகெயி இனோகா ஹேமமாலா | பிரதேச செயலாளர் அலுவலகம், கோனவினுவல | தென் மாகாணம் |
| 7 | கொட்டகொட ஹெட்டிஆரச்சிகே மிந்திக நிசாந்த ஜயசேகர | பிரதேச செயலாளர் அலுவலகம், பெந்தோட்டை | தென் மாகாணம் |
| 8 | கங்கானம் விதாரனகே லால் ரஞ்சித் | பிரதேச செயலாளர் அலுவலகம், கடுவன | தென் மாகாணம் |
| 9 | வீரசூரிய ஆரச்சிகே சுசந்த சாமல் | உதவி காணி ஆணையாளர் அலுவலகம், ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம் |

*4-348*

**தென் மாகாண சபை**

தென் மாகாண சபையின் 1992 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கத்தில் அடங்கிய தென் மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 10(1) ஆம், (2) ஆம் சட்டத்தின்கீழ் எனக்கு உள்ள அதிகாரத்தினால் கீழ்க்காணும் ஹம்பாந்தோட்டை மாகாணத்தின் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரதேசத்திற்குச் சொந்தமான வெலிபொதேவெல வீதி (கி. மீ. 6.1) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பொறுப்பேற்றுள்ளதாக இத்துடன் அறிவிக்கப்படுகிறது.

சன்திமா ராசபுத்தர,
கல்வி, காணி, காணி அபிவிருத்தி, பெருந்தெருக்கள்,
தகவல், கிராமிய, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்.

தென் மாகாண சபை,
2013.02.20.

4-349

## பதவிகள் - வெற்றிடம்

**ஆளுநர் செயலகம் சப்பிரகமுவ மாகாண சபை**

சப்பிரகமுவ மாகாண சபையின் நாடளாவிய சேவை வெற்றிடம்

வெற்றிடமாகவுள்ள சப்பிரகமுவ மாகாண சபையின் ஆளுநரின் செயலாளர் பதவிக்காக இலங்கை நிருவாக சேவையில் விசேட தரத்தினையுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விசேட தரத்தினையுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாவிடின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்களினது விண்ணப்பங்களும் கவனத்தில் கொள்ளப்படுவதனால், முதலாம் வகுப்பினையுடைய உத்தியோகத்தர்களும் இதற்காக விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

**ஆட்சேர்ப்பு**.- இந்த அழைப்புக்கு ஏற்ப கிடைக்கின்ற விண்ணப்பங்கள் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆளுநரின் செயலாளர் பதவிக்காக தகுதிவாய்ந்த உத்தியோகத்தரை தெரிவுசெய்வது கௌரவ ஆளுநர் அவர்களின் முழுமையான தற்றுணிபின்படி நடைபெறும்.

ஆளுநரின் செயலாளர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவது தொடர்பான இறுதி முடிவு கௌரவ ஆளுநர் அவர்களின் முடிவாகும்.

**விண்ணப்பங்களை அனுப்புதல்**.- கௌரவ ஆளுநர் அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக குறித்த உத்தியோகத்தரினால் தமது சுயவிபரங்கள் உள்ளடங்கக்கூடிய வகையில், சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்றை 2013.05.03 ஆந் திகதிக்கு முன்னர் ஆளுநரின் செயலாளர், சப்பிரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகம், மாகாண சபை கட்டிடத் தொகுதி, புதிய நகரம், இரத்தினபுரி எனும் முகவரிக்கு பதிவுத்தபாலின் மூலம் அனுப்புவதன் ஊடாக இதற்காக விண்ணப்பிக்கலாம்.

தபாலின் மூலம் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் குறித்து இந்த நிறுவனம் எந்தப் பொறுப்பையும் ஏற்காது.

பந்துல ஏ. நாகசிங்க,
ஆளுநரின் செயலாளர்,

ஆளுநர் அலுவலகம்,
சப்பிரகமுவ மாகாண சபை.
மாகாண சபைக் கட்டிடத் தொகுதி,
புதிய நகரம்,
இரத்தினபுரி.

4-372

---

**மேல் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்**

**பதவி வெற்றிடம் நிரப்புதல்**

மேல்மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்களுக்கு கோரப்படும் தகைமைகளை பூரணப்படுத்தியுள்ள மேல்மாகாண சபை அதிகார எல்லைக்குள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு அண்மித்த தொடராக 03 வருட காலங்கள் நிரந்தர குடியிருப்பாளராக உள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01. உப வோர்டன் | - | (ஆண்) |
| 02. உதவி இல்ல ஆசான் | - | (ஆண்/பெண்) |
| 03. பயிற்சிபெற்ற ஆசிரியர் | - | (ஆண்/பெண்) |
| 04. இல்ல அன்னை | - | (பெண்) |
| 05. சிறுவர் காவலர் | - | (ஆண்) |
| 06. உதவி மேற்றன் | - | (பெண்) |

07. சாரதி - (ஆண்)
08. சமையற்காரர் - (ஆண்/பெண்)
09. காவற்காரர் - (ஆண்)
10. அலுவலகப் பணி உதவியாளர் - (ஆண்/பெண்)
11. சுகாதார சிற்றூழியர் - (ஆண்/பெண்)

01. **சேவை நிபந்தனைகள்.-**

1.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உள்ளது. விதவைகள் மற்றும் அனாதைகள்/தபுதாரர்கள் ஓய்வூதியத்திட்டத்திற்கு சந்தாபணம் செலுத்த வேண்டும்.

1.2 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் மூன்று வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தி நியமிக்கப்படுவர். அரச அல்லது மாகாண அரசசேவையின் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட அபேட்சகரொருவர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் ஒருவருட வேலை பார்த்தல் அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

1.3 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவையின் விதிமுறைகளுக்கும் நிதிஒழுங்கு விதிக்கும், மேல்மாகாண அரசசேவைகள் நடைமுறைக்கோவைக்கும், மேல்மாகாண நிதிக்கட்டளை கோவைக்கும், மேல்மாகாண சபையின் கௌரவ ஆளுனர் அவர்களினால் அவ்வப்போது அமுலாக்கப்படும் கட்டளைகள் அல்லது ஆணைகளுக்கும், மேல்மாகாண அரசசேவைகள் ஆணைச்சபையினால் அவ்வப்போது அமுலாக்கப்படும் வேறு நிபந்தனைகள் மற்றும் ஆணைகளுக்கும் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஆணைகளுக்கும் ஏற்ப செயல்பட வேண்டும்.

1.4 அரசமொழிக் கொள்கையை செயற்படுத்துவதற்காக அ.நி.சு 07/2007 இனால் அமுலாக்கப்பட்ட விதிமுறைகளுக்கும் எதிர்காலத்தில் அமுலாக்கப்படும் விதிமுறைகளுக்கும் கட்டுப்படவேண்டும்.

02. **விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய ஒழுங்கு.-** விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை கீழ்காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு ஏற்ப ஏ4 கடதாசியில் இருபக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரியினால் சரியாகவும் தெளிவாகவும் தான் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழி மூலம் நிரப்பவேண்டும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் "செயலாளர், சுகாதார, சுதேசவைத்திய, சமூகநலன்புரி, பெண்கள் விவகார, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் மற்றும் சபை விவகாரஅமைச்சு - மேல்மாகாணம். இல 175, ஸ்டென்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடை" எனும் முகவரிக்கு 2013.04.23 ஆந் திகதிக்குமுன் அனுப்பவேண்டும். கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். அரச அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை திணைக்கள உயரதிகாரி ஊடாக அனுப்பவேண்டும்.

முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அது பற்றி விண்ணப்பதாரி பொறுப்பேற்கவேண்டும்.

03. **ஆட்சேர்ப்புமுறை.-** தகைமைகள் பூரணப்படுத்திய விண்ணப்பதாரிகளிடமிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு ஏற்ப கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு முழுமைப்படுத்தவேண்டிய வெற்றிட எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்பு நடைபெறும். இல. 01 முதல் 07 வரையான பதவிகளுக்கு மட்டும் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெற்றிடங்களின் தொகையைவிட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றால் நியமன அதிகாரியினால் அல்லது நியமன அதிகாரியினால் அதிகாரம் வழங்கப்படும் நிறுவனத்தினால் நடத்தப்படும் எழுத்துப்பரீட்சையொன்றின் பெறுபேற்றுக்கேற்ப திறன் ஒழுங்குவரிசையில் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்றினால் தகைமைகளை பரீட்சித்து உரிய வெற்றிடங்கள் தொகைக்கு ஆட்சேர்ப்பு நடைபெறும்.

04. **கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை.-** இல 01 முதல் 06 வரை பதவிகளுக்காக கட்டமைப்பு நேர்முகப்பரீட்சை நடத்தப்படும். இப்பதவிகள் மிகவும் உணர்வு பூர்வமாக நடந்துகொள்ள வேண்டிய சிறுவரின் நடத்தை கட்டுப்பாட்டிற்கு நேரடியாக தொடர்புபடும் பதவிகளாகும். எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் மத்தியில்தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் கட்டமைப்பு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நியமன அதிகாரியினால் போதுமான அளவு எனவிதிக்கும் உச்சமட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் மட்டும் கட்டமைப்பு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். மேற்படி தகைமைகள் கொண்ட விண்ணப்பதாரிகள் போதுமான எண்ணிக்கையில் இருப்பார்கள் எனில் வெற்றிட எண்ணிக்கை போன்று இரண்டு மடங்கு விண்ணப்பதாரிகள் தொகையினர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். விண்ணப்பதாரிகள் எழுத்துப்பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் நேர்முகப்பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்கப்படமாட்டாது. நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சிறுவர் உரிமைகள்/உரிமைகள், சிறுவர்களின் உளநிலைமற்றும் அரவணைப்பு பற்றிய அனுபவம் மற்றும் ஆழ்ந்த அறிவுள்ள மூவருக்குக் குறையாத அறிஞர் குழுவினால் இப்பதவிக்கு உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இருக்கும் ஆற்றல் குறித்து உறுதியான வினாக்களை விண்ணப்பதாரியிடம் கேட்டு வழங்கப்படும் புள்ளிகளுக்கும் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கும் ஏற்ப ஆட்சேர்ப்பு நடைபெறும்.

05. **நேர்முகப்பரீட்சை.-** இல. 7 முதல் 11 வரை பதவிகளுக்காக நேர்முகப் பரீட்சையொன்றுநடைபெறும். நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் மூவருக்குக் குறையாத நேர்முகப்பரீட்சை சபையொன்றினால் இப்பதவிகளுக்கு உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இருக்கும் ஆற்றல் குறித்து உறுதியான வினாக்களை விண்ணப்பதாரியிடம் கேட்டு வழங்கப்படும் புள்ளிகளுக்கும் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கும் ஏற்ப ஆட்சேர்ப்பு நடைபெறும்.

06. **பரீட்சைக்கட்டணம்.-** ரூ. 350/- ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் மாகாண வருவாய்த்தலைப்பு 20-03-02-99 க்கு வரவாகும் விதமாக அருகில் அமைந்துள்ள பிரதேச செயலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இவ்வாறு பணம்செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுக்கள் அல்லது காசுகட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், எந்தவொரு காரணத்திற்காக பரீட்சைக்குத்தோற்றாத அல்லது விண்ணப்பத்தை விலக்கிக்கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதி இல்லை எனதெரியவரும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கட்டணம் முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியோ மீளசெலுத்தப்படமாட்டாது. மேலும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைக்காக கைமாறவும் முடியாது.

07. இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் மேல்மாகாண சுகாதார, சுதேசவைத்திய, சமூகநலன்புரி, பெண்கள் விவகார சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை மற்றும் சபை விவகார அமைச்சினால் வழங்கப்படும் சட்டதிட்டங்களை மீறினால் அவ்விண்ணப்பதாரிகள் மேல் மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூகநலன்புரி, பெண்கள் விவகார சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை மற்றும் சபை விவகார அமைச்சினால் விதிக்கப்படும் எந்தவொரு தண்டனைக்கும் உட்படுவர்.

08. விண்ணப்பம் கோரும் அறிவித்தலுக்கு உரிய விடயங்கள் அல்லது இவ் அறிவித்தலில் வெளிப்படுத்தப்படாத விடயங்கள் தொடர்பாக மேல் மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூகநலன்புரி, பெண்கள் விவகார சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை மற்றும் சபை விவகார அமைச்சின் செயலாளரின் முடிவு இறுதி முடிவாகும்.

09. **உடற்தகைமை.-** விண்ணப்பதாரி சிறந்த நடத்தையும் பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான நல்ல சுகாதார நிலையில் இருத்தல் அவசியம். மேல் மாகாணத்தில் எந்த பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கும், போதுமான உடல் உளதகைமையுடன் இருத்தல் வேண்டும்.

**வேறு**

பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தேவையான அனைத்து தகைமைகளும் முழுமைப்படுத்தி இருக்க வேண்டும் என விண்ணப்பக்கோரல் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு அத்தகைமைகள் அனைத்து விதத்திலும் முழுமைபடுத்தியிருக்க வேண்டும். அதுபோல் விண்ணப்பதாரிகளினால் தகைமையை உறுதிபடுத்துவதற்கு உரிய சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கவேண்டும்.

10. **சம்பளத்திட்டம், வய தெல்லை மற்றும் சேர்ப்புக்கான தகைமைகள்.-**

10.1 **பதவி - உபவோர்டன்**

**சம்பளத்திட்டம்.-** ரூபா.13120-10×145-11×170-10×240-10×320-ரூபா22,040 (அ. நி. சு. அ. 6/2006(iv) - MN 1 - 2006 A)

**வயதெல்லை.-** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 22 விட குறையாமலும் 40 ஐ விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசசேவை/ மாகாண அரசசேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உச்சவயதெல்லை பொருந்தாது.)

**தகைமைகளும் அனுபவமும் :**

**கல்வித்தகைமைகள்.-** க. பொ. த. (சா/த) பரீட்சையில் இரண்டு முறைகளுக்கு மேற்படாத சந்தர்ப்பங்களில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கு சிறப்புச்சித்திகளுடன் ஆறு 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல், அவற்றில் 05 பாடங்கள் ஒரு முறையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் பழைய பாடவிதானத்தின்கீழ் 04 பாடங்களில்சித்தியடைந்திருத்தல்/புதியபாடவிதானத்தின்கீழ் மூன்று(03) (பொது அறிவுப்பரீட்சையைத் தவிர்ந்த) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**அனுபவம்.-** மேல்மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை சேவைகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றில் அல்லது நிலையங்களில் மூன்று 03 வருடங்களுக்குக் குறையாத தொடர்த்தேர்ச்சியான சேவைகால அனுபவம்.

**பரீட்சை பாடவிதானம் :**

| *வினாத்தாளின்பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| உளச்சார்பு<br>நேரம் - 01 மணித்தியாலம்<br>மொத்தப்புள்ளி - 100 | விண்ணப்பதாரியின் மொழி ஆற்றல் தர்க்கத்திறன் மற்றும் கணித ஆற்றலை பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்டது. |
| பொதுஅறிவு<br>நேரம் - 01 மணித்தியாலம்<br>மொத்தப் புள்ளி - 100 | பொருளாதார, அரசியல், கல்வி, சமூக, கலாசார, விஞ்ஞான விளையாட்டுத்துறைகளில் உள்நாட்டு வெளிநாட்டு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சமகால நடப்புக்களை பற்றிய விண்ணப்பதாரியின் அறிவை அளப்பதற்காக தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரத்தினால் அமையப்பெறும். |

10.2 **பதவி - உதவி இல்ல ஆசான்.-**

**சம்பளத்திட்டம்.**- ரூபா. 13,120-10×145-11×170-10×240-10×320-ரூபா 22,040 (அ.நி.சு.அ6/ 2006 (iv)-MN1-2006A)

**வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 22 ஐ விட குறையாமலும் வயது 40 ஐ விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசசேவை/ மாகாண அரசசேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உச்சவயதெல்லை பொருந்தாது.)

**கல்வித்தகைமைகள்**- க. பொ. த. (சா/த) பரீட்சையில் இரண்டு முறைகளுக்கு மேற்படாத சந்தர்ப்பங்களில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கு சிறப்புச் சித்தியுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல், அவற்றில் 05 பாடங்கள் ஒரு முறையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் பழைய பாடவிதானத்தின்கீழ் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்/ புதிய பாடவிதானத்தின் கீழ் மூன்று (03) (பொது அறிவுப்பரீட்சையைத் தவிர்ந்த) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

இலங்கை சமூகசேவைகள் கல்லூரியினால் வழங்கப்படும் சமூகப்பணிகள் தொடர்பான இரண்டு வருட டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

அல்லது

உளவள ஆலோசனை தொடர்பாக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றில் ஒருவருடத்திற்குக் குறையாத டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

**பரீட்சை பாடவிதானம்**

| *வினாத்தாளின்பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| தகைமை<br>காலம் - 01 மணித்தியாலம்<br>மொத்தப்புள்ளி -100 | விண்ணப்பதாரியின் மொழி ஆற்றல் தர்க்கத்திறன் மற்றும் கணித ஆற்றலை பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்டது. |
| பொதுஅறிவு<br>நேரம் - 01 மணித்தியாலயம்<br>மொத்தப் புள்ளி - 100 | பொருளாதார, அரசியல், கல்வி, சமூக, கலாசார, விஞ்ஞான விளையாட்டுத் துறைகளில் உள்நாட்டு வெளிநாட்டு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சமகால நடப்புக்களை பற்றிய விண்ணப்பதாரியின் அறிவை அளப்பதற்காக தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரத்தினால் அமையப்பெறும். |

10.3 **பதவி - பயிற்சிபெற்ற ஆசிரியர்.-**

**சம்பளத்திட்டம்.**- ரூபா. 13,120-10×145-11×170-10×240-10×320- ரூபா 22,040 (12 ஆம் படி) (அ. நி. சு. அ. 6/ 2006 (iv)-MN 1 - 2006 A)

**வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 22 ஐ விட குறையாமலும் வயது 40 ஐ விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசசேவை/ மாகாண அரசசேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது)

**கல்வித்தகைமை**.- க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு முறைகளுக்கு மேற்படாத சந்தர்ப்பங்களில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கு சிறப்புத்தேர்ச்சியுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல், அவற்றில் 05 பாடங்கள் ஒரு முறையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் பழைய பாடவிதானத்தின் கீழ் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்/ புதிய பாடவிதானத்தின் கீழ் மூன்று (03) (பொது அறிவுப்பரீட்சைத் தவிர்ந்த) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

இலங்கை சமூகசேவைகள் கல்லூரியில் இரண்டு வருட சமூக பணிகள் பற்றிய டிப்ளோமா பெற்றிருத்தல்.

அல்லது

பயிற்சிபெற்ற ஆசிரியர் சான்றிதழ் (சிங்களம்/ தமிழ்) பெற்றிருத்தல்.

**பரீட்சைபாடவிதானம்**

| வினாத்தாளின்பெயர் | பாடவிதானம் |
|---|---|
| தகைமை மற்றும் அறிவுப்பரீட்சை<br>நேரம் - 01 மணித்தியாலம்<br>மொத்தப்புள்ளி - 100 | விண்ணப்பதாரியின் மொழி ஆற்றல் தர்க்கத்திறன் மற்றும் கணித ஆற்றலை பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்டது. |
| பொதுஅறிவு<br>நேரம் - 01 1/ 2 மணித்தியாலம்<br>மொத்தப்புள்ளி - 100 | பொருளாதார, அரசியல், கல்வி, சமூக, கலாசார, விஞ்ஞான விளையாட்டுத் துறைகளில் உள்நாட்டு வெளிநாட்டு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சமகால நடப்புக்களை பற்றிய விண்ணப்பதாரியின் அறிவை அளப்பதற்காக தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரத்தினால் அமையப்பெறும். |

10.5 **பதவி - இல்ல அன்னை**.-

**சம்பளத்திட்டம்**.- ரூபா. 13,120-10×145-11×170-10×240-10×320 - ரூபா 22,040 (அ.நி.சு.அ. 6/2006(iv) - MN 1 - 2006 A)

**வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 22 ஐ விட குறையாமலும் வயது 40 ஐ விஞ்சாமல் இருக்க வேண்டும். (தற்போது அரசசேவை/ மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது)

**தகைமைகள்**.- **கல்வித்தகைமைகள்**.- க. பொ. த. (சா/ த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத சந்தர்ப்பங்களில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கு சிறப்புச் சித்தியுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல், அவற்றில் (05) பாடங்கள் ஒரே முறையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க. பொ. த. (உ/த) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடம் (பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

**அனுபவம்**.-மேல் மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை சேவைகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றில் அல்லது நிலையங்களில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத தொடர்ந்தேர்ச்சியான சேவைகால அனுபவம்.

**பரீட்சை பாடவிதானம்**

| வினாத்தாளின்பெயர் | பாடவிதானம் |
|---|---|
| பாடவிதான கற்றல்<br>நேரம் - 01 1/ 2 மணித்தியாலம் | கீழ்வரும் பாடவிதானத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படும் பல்தேர்வு வினாத்தாள்<br>* குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் உண்டாகும் நோய்கள், எளிமையானமுதலுதவி, அந்நோய்களைத் தடுத்துக்கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய சுகாதார முறைமைகள். |

* குழந்தை மற்றும் சிறுவர்களின் போஷாக்குத் தேவைகள் மற்றும் உணவு கொடுக்கும் போது கையாளவேண்டிய சுகாதார பழக்கங்கள்.
* குழந்தை மற்றும் சிறுவர்களின் சிறந்த உளவிருத்திக்காக செய்யத் தகுந்தவை, தகாதவை பற்றிய பொது அறிவு.

10.6 **பதவி - சிறுவர் காவலர் (ஓவர்சீயர்).-**

***சம்பளத்திட்டம்*** .- ரூபா. 13120-10×145-11×170-10×240-10×320-ரூபா 22,040 (அ.நி.சு.அ. 6/2006(iv) - MN 1 - 2006 A)

**வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 22 ஐ விட குறையாமலும் வயது 35 ஐ விஞ்சாமலும் இருக்க வேண்டும். (தற்போது அரசசேவை/ மாகாண அரசசேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது)

**தகைமைகள் :**

***கல்வித்தகைமைகள்***.- க. பொ. த. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத சந்தர்ப்பங்களில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கு சிறப்புச் சித்தியுடன் ஆறு 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல், அவற்றில் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க. பொ. த. (உ/த) பரீட்சையில் குறைந்தபட்சம் 01 பாடம் (பொது அறிவுப்பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

***அனுபவம்***.- மேல்மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றில் அல்லது நிலையங்களில் மூன்று 03 வருடங்களுக்குக் குறையாத தொடர்ந்தேர்ச்சியான சேவைகால அனுபவம்.

**பரீட்சை பாடவிதானம் :**

| வினாத்தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| உளச்சார்பு மற்றும் புலமைப்பரீட்சை<br>நேரம் - 01 மணித்தியாலம்<br>மொத்தபுள்ளி - 100 | விண்ணப்பதாரியின் மொழி ஆற்றல், தர்க்கத்திறன் மற்றும் கணித ஆற்றலை பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்டது. |
| பொதுஅறிவு<br>நேரம் - 01 மணித்தியாலம்<br>மொத்த புள்ளி - 100 | பொருளாதார, அரசியல், கல்வி, சமூக, கலாசார, விஞ்ஞான விளையாட்டுத் துறைகளில் உள் நாட்டு, வெளிநாட்டு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சமகால நடப்புக்களை பற்றிய விண்ணப்ப தாரியின் அறிவை அளப்பதற்காக தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரத்தினால் அமையப்பெறும். |

10.7 **பதவி - உதவிமேற்றன் :**

***சம்பளத்திட்டம்***.- ரூபா. 13120-10×145-11×170-10×240-10×320-ரூபா 22,040 (அ.நி.சு.அ. 6/2006 (iv) - MN 1 - 2006 A)

**வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 22 விட குறையாமலும் வயது 40 விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசசேவை/ மாகாண அரசசேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.)

***தகைமைகள்***.- ***கல்வித்தகைமைகள்***.- க. பொ. த. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத சந்தர்ப்பங்களில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கு சிறப்புச் சித்தியுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல், அவற்றில் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு (01) பாடம் (பொது அறிவுப் பரீட்சைத் தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

***தொழில்தகைமைகள்***.- தெஹிவளை பலதொழிநுட்ப நிறுவனத்தில் மனைப்பொருளாதார விஞ்ஞானம் ஒரு வருட டிப்ளோமா சான்றிதழ்;

அல்லது

இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்படும் சமையல் கலை 06 மாதங்களுக்குக் குறையாத முழுநேர பாடநெறியொன்றினைக் கற்றிருத்தல்.

அல்லது

மேல்மாகாண சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை சேவைகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றில் அல்லது நிலையங்களில் மூன்று 03 வருடங்களுக்குக் குறையாத தொடர்ந்தேர்ச்சியான சேவைகால அனுபவம்.

**பரீட்சை பாடவிதானம்**

| வினாத்தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| தகைமை மற்றும் அறிவுப்பரீட்சை<br>நேரம் - 01 மணித்தியாலம்<br>மொத்த புள்ளி - 100 | விண்ணப்பதாரியின் மொழி ஆற்றல், தர்க்கத்திறன் மற்றும் கணித ஆற்றலை பரிசோதிப்பதற்காக தயாரிக்கப்பட்டது. |
| பொதுஅறிவு<br>நேரம் - 01 1/ 2 மணித்தியாலம்<br>மொத்தபுள்ளி - 100 | பொருளாதார, அரசியல், கல்வி, சமூக, கலாசார, விஞ்ஞான விளையாட்டுத் துறைகளில் உள் நாட்டு, வெளிநாட்டு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சமகால நடப்புக்களை பற்றிய விண்ணப்ப தாரியின் அறிவை அளப்பதற்காக தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரத்தினால் அமையப்பெறும். |

10.8 **பதவி - சாரதி (வகுப்பு II ஆ) :**

***சம்பளத்திட்டம்.***- ரூபா. 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா18,860 (அ.நி.சு.அ.- 6/2006 (IV) - PL- 3-2006 A)

**வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 18 விட குறையாமலும் வயது 45 விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவை/ மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.)

**கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :**

- கல்வி பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையொன்றில் குறைந்தபட்சம் 8 ஆம் தரம்/ 9 ஆம் தரம் சித்தியடைந்திருத்தல்.
- தனியார்/ வாடகை வாகனம் மற்றும் தார் நிறை 24 அந்தரை விட குறைவான ஸ்டேசன் வகன் ஓட்டுவதற்காக மோட்டார் வாகனப்போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட திறன் சான்றிதழ் பெற்றிருத்தல்.
- சாரதியாக 03 வருடஅனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)
- ஆகக் குறைந்த உயரம் 05 அடி.
- பகல் நேரத்திலும் இரவு நேரத்திலும் சேவையில் ஈடுபடுவதற்கான உடலியல்ரீதியாக தகைமையுள்ள நிலையில் இருக்கவேண்டும் நல்ல கண்பார்வை இருத்தல் அவசியம்.
- வீதிப் போக்குவரத்து சட்டக்கோவை பற்றிய நல்ல அறிவு இருத்தல்.

10.9 **பதவி - சமையல்காரர் :**

***சம்பளத்திட்டம்.***-ரூபா.12,210-10×130-10×145-10×160-12×170- ரூபா18,600 (அ. நி. சு. அ. - 6/2006 (IV) - PL-2-2006 A)

**வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 18 விட குறையாமலும் வயது 40 விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவை/ மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது)

***தகைமைகள்.- கல்வித்தகைமைகள்.***- க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே முறையில் ஆறு பாடங்களுக்குக் குறையாமல் குறைந்தபட்சம் இரண்டு சிறப்புச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

***தொழில்தகைமைகள்.***- அரச அல்லது அரசினால் பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்தினால் நடத்தப்பட்ட சமையல்/ சமையல் கலை தொடர்பாக மூன்று மாதங்களுக்குக் குறையாத தொழில் கற்கைநெறியொன்றை கற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

***அனுபவம்.***- ஒரு நேரத்தில் 20 பேர்களுக்குக் குறையாமல் சமைக்கும் ஆற்றல் இருத்தல்.

10.10 **பதவி - காவல்காரர்**

***சம்பளத்திட்டம்.***- ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 (அ. நி. சு. அ. - 6/ 2006 (IV) - PL1-2006 A)

**வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 18 விட குறையாமலும் வயது 45 விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவை/ மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது)

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**.- க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரு தடனவயில் ஆறு பாடங்களுக்குக் குறையாமல் குறைந்தபட்சம் இரண்டு சிறப்புச்சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

10.11 **பதவி - அலுவலக சிற்றுழியர்**.-

**சம்பளத்திட்டம்**- ரூபா. 11,730-10×120-10×130-10×145-12×160-ரு. 17,600 (அ.நி.சு.அ- 6/2006 (IV)- PL1-2006 A)

**வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு வயது 18 விட குறையாமலும் வயது 45 விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவை/ மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது)

**கல்வித்தகைமைகள்**.- க.பொ.த. (சா/ த) பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு பாடங்களுக்குக் குறையாமல் குறைந்தபட்சம் இரண்டு சிறப்புச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

10.12 **பதவி - சுகாதார சிற்றூழியர்** :

**சம்பளத்திட்டம்**.- ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600 (அ.நி.சு.அ- 6/2006 (IV)- PL1-2006 A)

**வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு வயது 18 ஐ விட குறையாமலும் வயது 45 விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவை/ மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது)

**கல்வித்தகைமைகள்**.- க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே தடவையில் ஆறு பாடங்களுக்குக் குறையாமல் குறைந்தபட்சம் இரண்டு சிறப்புச்சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

**வேறு தகைமைகள்**.- சிறந்த நடத்தையுடன் நல்ல உடல் சுகாதாரமும் இருக்க வேண்டும். விண்ணப்பிக்கும் திகதிக்கு அண்மைக்கால மூன்று 03 வருடத்திற்குள் மேல்மாகாணத்தில் வதிவிடம் அமைந்திருத்தல்.

* 2012.05.11 திகதிய வர்த்தமானியின் படி விண்ணப்ப படிவம் அனுப்பிய அலுவலகப் பணி உதவியாளர், சுகாதார சிற்றூழியர், காவற்காரர் மீண்டும் தங்களது விண்ணப்பபடிவங்களை அனுப்பவும்.

செயலாளர்,
சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி,
பெண்கள் விவகார நன்னடத்தை மற்றும்
சிறுவர் பாதுகாப்பு சேவைகள் மற்றும் சபை
விவகார அமைச்சு,
மேல் மாகாணம்.

20.03.2013.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மேல்மாகாண அரச சேவையில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்**
**....................... பதவி**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

01. (i) விலாசத்தை இறுதியாக இட்டு பெயர் :-----.

(ii) முழுப்பெயர் :-----.

02. தேசிய ஆடையாள அட்டை இலக்கம் :-----.

03. நுழைவுப்பத்திரத்தை அனுப்பவேண்டிய முகவரி :-----.
(அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரியாயின் அவரது அலுவலக முகவரியை எழுத முடியும். முகவரியில் மாற்றம் ஏற்படுமாயின் உடன் அறிவிக்க வேண்டும்)

04. நிரந்தர முகவரி மற்றும் தொலைபேசி இல. :-----.

05. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.

06. ஆண்/ பெண் பெண் ☐ ஆண் ☐

07. திருமணமான/ ஆகாதவர் மணமானவர் ☐ மணமாகாதவர் ☐

08. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்-சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் :-----.

09. பிறந்ததிகதி :- ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

(i) 2013.03.01 ஆந் திகதிக்கு வயது :- வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

(ii) இலங்கை பிரசையாகுவது - பிறப்பினாலா ? பதிவினாலா ?

09. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்

(i) க.பொ.த. (சா/த)

| பாடம் | பெற்றுள்ள சித்தி | பாடம் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|---|
| 01. ............................ | ............ | 06. ............................. | ............ |
| 02. ............................ | ............ | 07 .............................. | ............. |
| 03. ............................ | ............ | 08. ............................. | ............. |
| 04. ............................ | ............ | 09. ............................. | .............. |
| 05. ............................ | ............ | 10. ............................. | .............. |

(ii) க.பொ.த. (உ/த)

| பாடம் | பெற்றுள்ள சித்தி | பாடம் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|---|
| 01. ............................ | ............ | 03. ............................. | ............ |
| 02. ............................ | ............ | 04. .............................. | ............. |

(iii) பெற்றுள்ள பட்டம் :-----.

(iv) பட்டத்திற்காக கற்ற பாடங்கள் :-----.

(v) பட்டம் செல்லுபடியாகும் திகதி :-----.

(vi) பட்டம்பெற்ற பல்கலைக்கழகம் :-----.

10. தொழில் தகைமைகள் (பொருந்துமாயின்) :-----.

11. வேறு தகைமைகள் :-----.

12. அனுபவம் :-----.

13. நீர் ஏதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டனை பெற்றிருந்தால் அது பற்றி விபரம் வழங்குக :-----.

14. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :-----.

15. பணம் செலுத்திய அலுவலகமும் பற்றுச்சீட்டிலக்கமும் :-----.

| பற்றுச்சீட்டினை இக்கட்டத்தின் உள்ளே கழறாதவாறு ஒட்டுக. |
|---|

16. இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப சரியானதும் உண்மையானதும் எனத் தெரிவிக்கின்றேன். இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு அமைவாக என்னால் பிழையான தகவலொன்று வழங்கப்பட்டிருப்பின் பரீட்சைக்கு முன்பதாகவோ பின்போ எனது பரீட்சார்த்தி நிலையை செல்லுபடிற்றதாக்க முடியும் என்பதையும், தெரிவின் பின்னராயின் அது தொடர்பாக தெரியவரும்போது பணியிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

17. **திணைக்கள தலைவரின் சான்றிதழ் (தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)**

விண்ணப்பதாரியான, திரு./திருமதி/ செல்வி.................................................................... இத் திணைக்களத்தில்...................... பதவியில் பணியாற்றுகின்றார் என்றும், மேலே விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை இத்திணைக்களத்தின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

-------,
திணைக்கள அதிகாரியின் கையொப்பம்
(பதவி முத்திரையை இடுக)

திகதி :-----.

2013.03.20.

4-403

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.